**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்திவெளியீடு**

**செ.வெ.எண்.390** **நாள் : 19.11.2025**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு. வி.க. நகர் மண்டலத்தில் ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி, ரூபாய் 35.08 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

******

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்தில் ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி, ரூபாய் 35.08 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று (19.11.2025) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட மேடவாக்கம் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் வார்டு-75, மேடவாக்கம் 2 வது தெருவில், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த திறந்த வெளி நிலத்தினை மாநகராட்சி சார்பில் மீட்டெடுத்து அவ்விடத்தில் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைப்பதற்கான பணியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு-74, இந்து சமய அறநிலைத்துறை சார்பில் அருள்மிகு சேமாத்தம்மன் கோவிலில் நடைபெற்று வரும் கோயில் மண்டபம் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வார்டு-69, ஜி.கே.எம் காலனி ஜம்புலிங்கம் சாலையில், ரூபாய் 25.72 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த சமுதாயக் கூடம் 40,300 சதுரடி பரப்பளவில் தரைத்தளத்தில் கார், இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடனும், முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 435 நபர்கள் அமர்ந்து உணவு சாப்பிடும் வகையில் உணவுக்கூடம், இரண்டாவது தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண மண்டபம்

மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான தங்கும் அறைகள் வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

பின்னர், வார்டு-68, கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலையில், ராஜா தோட்டம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு வளாகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் இரண்டு பல்நோக்கு மைய கட்டடப் பணிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளவும் விரைவாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலை அருகே பொதுப்பணித் துறையின் சார்பில் ரூபாய் 8.26 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டட கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் திருமதி முல்லை, சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சு. கீதா, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ரமணி லோகேஷ், திருமதி புனிதவதி எத்திராஜன் மற்றும் பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் திரு. விஜயன் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**